செய்தி வெளியீடு எண்: 480 நாள்:– 14.8.2009

<u>செய்திக் குறிப்பு</u>

<u>சிறந்தஆதிதிராவிடர் எழுத்தாளர்களுக்கு தமிழக அரசு உதவித்தொகை பெற படைப்புகள் அனுப்ப காலக்கெடு நீட்டிப்பு</u>

தமிழக அரசின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர்/பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டு பணிக்கான (Adata Foundation) நிதியிலிருந்து, 2009-2010-ஆம் ஆண்டிற்கான சிறந்த ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் கிறித்துவர்/பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த 10 எழுத்தாளர்களைத் தேர்ந்தெடுத்து நிதி உதவி வழங்கப்பட உள்ளது தெரிந்ததே. தவிர ஆதிதிராவிடர் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் அல்லாத ஒருவருக்கும் பரிசு வழங்கப்படும். இதற்காக நூல் வெளியிட ரூ.20,000/- வரை நிதி உதவி அளிக்கப்படும். பெயர், முகவரி, படைப்பின் பொருள் போன்ற விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். இதுகுறித்த விவரங்களை தமிழக அரசின் tn.gov.in என்ற இணைய தளத்தில் (Website) அறிந்து கொள்ளலாம். மேலும் அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் நலஅலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம். முறையான விண்ணப்பத்துடன் படைப்புகள் எழுத்து வடிவிலும் குறுந்தகடு (CD) வடிவிலும் அரசுக்கு வந்துசேரவேண்டிய கடைசி நாள் 20.8.2009 லிருந்து 15.9.2009 ஆக நீடிக்கப்பட்டுள்ளது.

விஷ்வநாத் ஷெகாங்கர்
அரசு முதன்மை செயலாளர்

அனுப்ப வேண்டிய முகவரி:-
ஆணையர்,
ஆதிதிராவிடர் நலம்,சென்னை-5

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.